மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் துணை நிற்கும் என்ற நோக்கில் கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன், நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் கடந்த ஓர் ஆண்டு காலத்தில் மறைந்த 1051 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நலநிதியாக ரூ.1 கோடியே 51 லட்சம் நிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், வெண்ணந்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், கே.கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கடந்த ஓர் ஆண்டில் மறைந்த

கழக உறுப்பினர்கள் 1051 பேரின் குடும்பத்தினருக்கு - கலைஞர் குடும்ப நல நிதி!

ரூ.1 கோடியே 51 லட்சம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், நவ. 30- மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் துணை நிற்கும் என்ற நோக்கில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் கடந்த ஓர் ஆண்டு காலத்தில் மறைந்த 1051 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நலநிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் போராட்டங்களில் ஈடுபட்டு வயோதிகம் காரணமாகவோ, உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலோ, விபத்தினாலோ, தவிர்க்க முடியாத காரணத்தினாலோ மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு, கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பேற்றது அன்று முதல் மறைந்த கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி என்ற பெயரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கி வருகிறார்.

அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் ஒன்றிய நகர பேரூர் வாரியாக மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நலநிதி வழங்கப்பட்டுள்ளது.

அதில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் நாமக்கல் கிழக்கு நகரத்தில் 16, நாமக்கல் மேற்கு நகரத்தில் 32, நாமக்கல் தெற்கு நகரத்தில் 23, நாமக்கல் ஒன்றியத்தில் 69, மோகனூர் ஒன்றியத்தில் 73, புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியத்தில் 44, புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியத்தில் 35, மோகனூர் பேரூரில் 37 என மறைந்த கழக உறுப்பினர்கள் 329 பேர் குடும்பத்திற்கும்,

ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் ராசிபுரம் நகரத்தில் 29, ராசிபுரம் ஒன்றியத்தில் 46, நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் 62, அத்தனூர் பேரூரில் 10, இரா. புதுப்பட்டி பேரூரில் 10, பட்டணம் பேரூரில் 12, பிள்ளாநல்லூர் பேரூரில் 25, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் 110, வெண்ணந்தூர் பேரூரில் 28, அத்தனூர் பேரூரில் 10 என மறைந்த கழக உறுப்பினர்கள் 332 பேர் குடும்பத்திற்கும்,

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேந்தமங்கலம் ஒன்றியத்தில் 70, கொல்லிமலை ஒன்றியத்தில் 39, சேந்தமங்கலம் பேரூரில் 34, எருமப்பட்டி ஒன்றியத்தில் 164, எருமப்பட்டி பேரூரில் 7, சிராப்பள்ளி பேரூரில் 13, நாமகிரிப்பேட்டை பேரூரில் 36, காளப்பநாயக்கன்பட்டி பேரூரில் 19 மறைந்த கழக உறுப்பினர்கள் என 382 பேர் குடும்பத்திற்கும் என ஆக மொத்தம் மறைந்த கழக உறுப்பினர்கள் 1051 குடும்பத்திற்கு ரூ 1 கோடியே 51 லட்சம் மதிப்பிலான முத்தமிழ் அறிஞர் கலைஞர் குடும்ப நலநிதியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

வெண்ணந்தூர் ஒன்றியத்தில் மச்சுகாளிப்பட்டி ஸ்ரீவாரி மஹாலில் வெண்ணந்தூர் ஒன்றியம் மற்றும் அத்தனூர் பேரூரில்மறைந்த கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, அத்தனூர் பேரூர் கழக செயலாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் மறைந்த கழக உறுப்பினர்கள் 118 பேர் குடும்பத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

அதேபோல் வெண்ணந்தூர் பேரூர் பகுதியில் மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஒன்றியக் கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, வெண்ணந்தூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.எஸ்.எஸ். ராஜேஷ் ஆகியோர் முன்னிலையில் மறைந்த கழக உறுப்பினர்கள் 28 பேர் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நலநிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கினார்.

துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தியாகதுருகம் பேரூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தே.மலையரசன் எம்.பி, 200க்கும் மேற்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்துடன், பழவகைகளையும், இனிப்புகளையும் வழங்கி, துணை முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடினார், விழாவில் மருத்துவர்கள், செவிலியர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் புதிய சமூக நீதி கல்லூரி மாணவர் விடுதி அமைக்கும் இடத்தில் அடிக்கல் நாட்டி, மரக்கன்று நட்டு கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார், நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சைதையில் புதிய கட்டிடம்!

சென்னை, நவ.30– நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் 08.09.2025 அன்று ஆறு தளங்களுடன் கூடிய புதிய கட்டிடம் சுமார் ரூ.28.75 கோடி மதிப்பீட்டில் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்சமயம் புதிய கட்டிடத்தில் தரை தளத்தில் அவசர சிகிச்சை, முதல் தளத்தில் புற மருத்துவ பயனாளிகள் பிரிவும், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறாம் தளங்களில் இரத்த பகுப்பாய்வகம், உள் மருத்துவ பயனாளிகள் பிரிவு டயாலிசிஸ் பிரிவு, நான்கு அறுவை அரங்குகள், தற்சமயம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. தினமும் வெளிப்புற மருத்துவ பயனாளிகள் 1200க்கும் மேற்பட்டோர் பயன் பெறுகின்றனர். எலும்பு முறிவு அறுவை சிகிச்சைகள் மற்றும் 20,000 சுழற்சி டயாலிசிஸ் செய்து சிறப்பான சேவைகள் செய்யப்பட்டுள்ளது.

2018–19இல் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டடம் மற்றும் ஊடுகதிர் (X–ray) உபகரணங்கள் வழங்கி வருடத்திற்கு சுமார் 20,000 மருத்துவ பயனாளிகள் பயன்பெறும் வகையில் X–ray எடுக்கப்பட்டு வருகிறது. இன்று சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் 2,100 சதுர அடி பரப்பளவில் காத்திருப்போர் கூடம் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

கொள்கை உறுதியில் இளைய பெரியாராய் விளங்குகிறார் உதயநிதி ஸ்டாலின்!

நலஉதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, நவ. 30- கொண்ட கொள்கையில் உறுதியாய் விளங்குவதில் இளைய பெரியாராய் திகழ்கிறார் உதயநிதிஸ்டாலின் என்று திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு, நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

28.11.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், கீழ்நாத்தூர் - அற்புதமாதா கோவில் அருகில், திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சரும், திராவிடத்தின் திருவிளக்கு உதயநிதிஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் தலைமை வகித்தார்.

ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாநகர பகுதி செயலாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, லயன் பா.ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர பகுதி செயலாளர் சி.சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

1000 பேருக்கு நல உதவிகள்!

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, 1000 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அவர் உரையாற்றும் போது துணை முதல்வர் உதயநிதிஸ்டாலினுக்கு திராவிடத்தின் திருவிளக்கே என்கிற பட்டத்தை இங்கே நமது தோழர்கள் அளித்துள்ளார்கள். இன்று முதலமைச்சருக்கு உற்ற துயாக இருந்து பணியாற்றுபவர்களில் முதல் இடத்தை பிடித்திருப்பவர் துணை முதல்வர் உதயநிதி அவர்கள். அதனால் முதல்வரின் முதல் படை வீரனே என்று சொன்னாலும் பொருத்தமாக இருக்கும் .

நேற்று அவரது பிறந்த நாள். இளைஞர் அணியினர் பொதுவாக வெள்ளை சீருடை அணிவது வழக்கம். ஆனால் பிறந்த நாளில் நேற்று உதயநிதி கருப்பு சீருடை கருப்பு பேண்ட் போட்டிருந்தார். என் மனமெல்லாம் குளிர்ந்தது. கருப்புச்சட்டையை நாட்டுக்குப் போட்டி காட்டியவர் தந்தை பெரியார். ஆந்த கருப்பு சட்டையை பிறந்த நாளில் உதயநிதி போட்டிருப்பதை கண்டு பூரிப்படைந்தேன்.

பெரியார்தான் சொன்னார் எல்லாரும் ஒன்று. உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று எதுவும் இல்லை என்று. இரண்டே சாதி தான். ஒன்று ஆண் சாதி மற்றொன்று பெண் சாதி தான். இந்தியாவில் இதை சொன்னவர் தந்தை பெரியார். அனைவரும் சமம் என்று சொன்னவர் தந்தை பெரியார். அப்படி சொன்ன தந்தை பெரியாரின் சீருடையைத்தான் தன் பிறந்த நாளில் அணிந்திருந்தார் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின். ஆதனாலேயே அவர் என் கண்ணுக்கு இளம் பெரியாராக தெரிகிறார். அவர் ஆடையில் மட்டுமல்ல தான் கொண்டிருக்கக்கூடிய கொள்கையிலும் ஒரு வைராக்கியத்துடன் பெரியாரைப்போல இருக்கிறார். கொள்கையில் எந்த சமரசமும் செய்து கொள்ளவில்லை. அது சட்டமன்ற உரையாக இருந்தாலும், அவருடைய கொள்கை எங்களுக்கு தெரிகிறது.

திராவிட இயக்கத்திற்கு ஐந்து தலைமுறைகள் உண்டு. முதல் தலைமுறை தந்தை பெரியார். இரண்டாம் தலைமுறை அறிஞர் அண்ணா. மூன்றாம் தலைமுறை முத்தமிழறிஞர்



கலைஞர். நான்காம் தலைமுறை நமது முதல்வர் தளபதியார் அவர்கள். இதோடு திராவிட இயக்கத்தின் பணிகள் முடிந்து விட்டதா இல்லை. இன்னும் தமிழர்களுக்காக 50ஆண்டுகள் பணியாற்ற வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இன்னமும் 50ஆண்டுகாலம் உழைக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கான அடையாளம் உதயநிதிஸ்டாலின். அப்படிப்பட்டவர் கருப்பு சீருடை அணிந்திருக்கிறார் என்று சொன்னால், பெரியாரின் கொள்கைகளை, பேரறிஞர் அண்ணா அவர்கள் எண்ணியதை 50 ஆண்டு காலம் இந்த இயக்கத்தை கட்டிக்காத்த கலைஞரின் எண்ணங்களை எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், எல்லோரும் சமம் என்று எண்ணி ஆட்சி செய்து கொண்டிக்கக்கூடிய திராவிட நாயகர் தளபதியாரின் எண்ணங்களை நிறைவேற்றுகிற வாய்ப்பு திராவிட இயக்கத்தின் மையப்புள்ளியாக இருக்கிற உதயநிதிக்கு மட்டுமே உள்ளது. அதனால் தான் அவரை ஐந்தாம் தலைமுறை என்று கொண்டாடுகிறோம்.

இன்னும் 50 ஆண்டு காலம் இந்த நாட்டிற்கு கொண்டு செய்கிற வாய்ப்பு உள்ளவர் உதயநிதி. அவருடைய பிறந்த நாளைத்தான் இன்று நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அவர் நீண்ட புகழோடும் நிலைத்து செல்வத்தோடும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இந்த 19வது வார்டு மாநகராட்சியின் மூலமாக அமைச்சர் என்ற முறையில் பெற்ற சிறப்பு நிதி சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலமாக பல சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எரிகிற திருவிளக்காக இருந்தாலும் அதற்கு ஒரு துண்டுதல் தேவை. அரசு அல்லது மாநகராட்சி செய்ய வேண்டும் என்று எண்ணினால் கூட அதை நின்று இந்த வட்டச் செயலாளர் நாகராஜ் செய்துள்ளார்.

மின்விளக்கு அமைப்பதற்கு 26இலட்சமும், சிறுபாலம் கட்டுவதற்கு ஐந்து இலட்சமும், தவசியர் குளம் பகுதியில் தார்சாலையும், சிமெண்ட் சாலையும் அமைப்பதற்கு ரூ.25இலட்சமும், முத்தாலம்மன் கோயில் தெரு முழுவதும் தார்சாலையும், ராமஜெயம் நகரிலும் தார் சாலையாகவும், தேன்பழனி நகர் பகுதியில் 66இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலையும் என பல கோடி தொகையில் இந்த 19வது வார்டிற்கு பல நன்மைகள் செய்யப்பட்டுள்ளது.

1957லிருந்து நாம் திருவண்ணாமலையை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக வைத்துள்ளோம். ஆதனால்தான் முத்தமிழறிஞர் கலைஞர் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறாரோ அப்போதெல்லாம் நமது தொகுக்கு, மாவட்ட தலைநகருக்கு பல திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. இடைப்பட்ட நிலையில் யாராவது ஆட்சிக்கு வந்தால் ஏதேனும் திட்டங்கள் நடைபெறுகிறதா என்றால் இல்லை. இந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே நம்முறைய முதல்வர் தளபதியார் அவர்கள் பல திட்டங்களை கொடுத்துக் கொண்டு வருகிறார். நம்முறை காந்திசிலை அருகில் தேர்தல் பிரச்சாரத்தின்போது பேசிய முதல்வர், ஆட்சிக்கு வந்தால் மாடவீதிக்கு கான்கிரீட் சாலை அமைத்து தருவேன் என்று கூறினார். அதை செய்து தந்துள்ளார்.

மக்களுக்கான பல திட்டங்கள்!

அதைப்போல தமிழ் நாட்டு மக்களுக்கு பல திட்டங்களை தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறார். ஆட்சிக்கு வந்தார் மகளிர் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்தார். அண்ணன் வீட்டு சீதனம் போல பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூபாய் ஆயிரம் மகளிர் உரிமைத்தொகை வழங்கினார். தாய்மார்களிடம் இந்த பணத்தை கொடுத்தால்தான் அவது வீட்டிற்கு பொறுப்பாக செலவாகும் என்ற காரணத்தினால் தமிழக முதல்வர் அவர்கள் பெண்களிடம் இந்த தொகையை வழங்கினார். பெண்கள் பேருந்தில் சென்றால் கட்டணம் இல்லை என்கின்ற விடியல் பயணம். கல்லூரியில் படிக்கின்ற பெண்களுக்கு மாதந்தோறும் புதுமைப்பெண் என்ற திட்டத்தின்கீழ் மாதம் ரூபாய் ஆயிரம். தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் தம்பிகள் கல்லூரியில் படிக்கும்பொழுது மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை கல் நகர் பகுதியில் இருக்கக்கூடிய தாய்மார்கள், கொட்டையூர் என்ற பகுதியில் பேராயம்பட்டு, பெருந்துறைப்பட்டு ஆகிய பகுதிகளில் புல் அறுக்க செல்வார்கள். அந்தப் பொருட்களை திருவண்ணாமலை கடலைக்கடை மூலையில் வைத்து விற்பனை செய்வார்கள். அதில் வருகின்ற பணத்தை வைத்துக் கொண்டு வீட்டிற்கு எடுத்து செல்வார்கள். வீட்டில் உள்ள பையன் சாப்பிட்டானா என்று அந்த தாய்க்கு தெரியாது. காலையில் பிள்ளை சாப்பிட்டானா என்று கூடத்தெரியாது. அந்த நிலையை மாற்றி அந்த குழந்தைகளுக்கு காலையில் அறுசுவை உணவு திட்டம் என பள்ளிகளில் வழங்கும் திட்டத்தை நமது முதல்வர் அவர்கள் வழங்கியுள்ளார். இந்தத் திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது.

கொரோனா நோய் தாக்கியபோது, அதில் பல குழந்தைகளின் தாய், தந்தையர் இருவருமே இறந்து விட்டார்கள். இந்த நிலை இந்தியா முழுவதும் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டு முதலமைச்சர் தான் தாய் - தந்தை இல்லாத குழந்தைகள் அதாதை இல்லை அவர்கள் எங்கள் வீட்டுப்பிள்ளைகள் என அற்புதமான அன்பு கரங்கள் என்ற திட்டத்தை கொண்டு வந்தார்.

தாய் - தந்தை இல்லாத குழந்தைகளுக்கு நானே தாய், தந்தையாக இருக்கிறேன் என்று சொல்லித் தான் இந்த அன்பு கரங்கள் திட்டத்தை கொண்டு வந்து அவர்களுக்கான பணத்தை வங்கியில் வைப்புத்தொகையாக செலுத்தி, அவர்களின் கல்வி செலவை நானே ஏற்கிறேன் என்று இந்த திட்டத்தை கொண்டுவந்துள்ளார் முதல்வர். அப்படிப்பட்ட தாயுமானவராக விளங்குகிறார் தமிழக முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின்.

இந்த இயக்கத்தை 50 ஆண்டுகாலம் தொடர்ந்து நடத்தி செல்வதற்காக தமிழன் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்பதற்காக 70 வயதைக் கடந்திருக்கிற தமிழ்நாட்டு முதலமைச்சர், இதோ உதயநிதி என்கிற உதயசூரியனை எங்கள் கண்ணுக்கு காட்டியிருக்கிறார். அவருக்கு நாங்கள் பிறந்த நாள் விழா எடுக்கிற, அதே நேரத்தில் அவரை எங்களுக்கு அடையாளம் காட்டியிருக்கூடிய தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு எங்களது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு உரையாற்றினார்.

பொது கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜய லட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தரராசன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், மங்கலம் பிரபாகரன், கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்த பாண்டியன், சி.மாரிமுத்து, க.சுப்பிரமணி, த. செந்தில் குமார், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, டி.கென்னடி, துணை மேயர் சு.ராஜாங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக வட்ட செயலாளர் பி.ஆர்.நாகராஜ் நன்றி கூறினார். முன்னதாக மு.அம்பேத்கர் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், S.I.R விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யும் பணிகள் குறித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆய்வு மேற்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.